“பொருளாதார நிலைத்தன்மை பத்திர விளைவு வளையியின் நிலைத்தன்மையை வலுப்படுத்துகிறது”

FIRST CAPITAL நிலையான வருமான பரிந்துரைகள் | 28 ஒக்டோபர் 2025

FIRST CAPITAL RESEARCH

Analysts:
Ranjan Ranatunga
ranjan@firstcapital.lk

Dimantha Mathew
dimantha@firstcapital.lk

1.0
FCR – முன்னைய பரிந்துரைகள்

"அடுத்த 6-12 மாதங்களுக்கு விளைவு நிலையானதாக இருக்கும்"

அடுத்த 6-12 மாதங்களுக்கு விளைவு நிலையானதாக இருக்கும்



10Yr — Dec-24 to date **-78 bps**

5Yr — Dec-24 to date **-93 bps**

1Yr — Dec-24 to date **-85 bps**

முன்னைய பரிந்துரைகள்

ஜனவரி 16, 2025

"2Q2025 இலிருந்து பொருளாதாரம் வேகமடைவதால், அரசு பத்திர வருவாய் விளைவுகளில் 100-150bps வரை மேல்நோக்கிய அழுத்தத்தைக் காண வாய்ப்புள்ளது.."

- தவறானது

மார்ச் 28, 2025

"விளைவு வளையியின் மேல்நோக்கிய சரிசெய்தலிற்கான எதிர்பார்ப்பு 4Q2025E வரை தாமதமானது."

- சரியானது

ஜூலை 14, 2025

"அடுத்த 6-12 மாதங்களுக்கு விளைவு நிலையானதாக இருக்கும், குறுகிய காலத்திற்கு வட்டி வருவாயைத் தொடர்ந்து பெறும் நிலைப்பாட்டுடன் மாறுங்கள்.."

- சரியானது

சந்தை நகர்வு குறித்த மதிப்பாய்வு – 9M2025

9M2025 சுருக்கமாக :

"குறுகிய காலத்திற்கு வட்டி வருவாயைத் தொடர்ந்து பெறும் நிலைப்பாட்டுடன் மாறுங்கள்.."

1H2025இல் விளைவுகள் கிட்டத்தட்ட 100bps ஆல் குறைந்து விளைவு வளையி முக்கிய மாற்றத்தைக் கண்டது. விளைவு வளையியில் காணப்பட்ட இச் சரிவு வங்கித் துறையில் அதிகரித்த அதிகப்படியான திரவத்தன்மை (மே 30, 2025 அன்று ரூ. 203.8 பில்லியனை எட்டியது) மற்றும் மே-25 கொள்கை கூட்டத்தில் கொள்கை வீதங்கள் 25bpsஆல் மேலும் தளர்த்தப்பட்டமையால் பெருமளவில் ஆதரிக்கப்பட்டது.

இருப்பினும், 3Q2025இல் 1Yr, 5Yr மற்றும் 10Yr முதிர்வுகளுக்கு விளைவுகள் முறையே 12bps, 5bps மற்றும் 27bps ஆல் அதிகரித்து விளைவு வளைவின் வீழ்ச்சிப் போக்கு எதிர்த் திசையில் மாறியது. அலுவல்சார் இருப்பு நிலையில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி, பணவீக்கம் நேர்மறை நிலைக்கு மாற்றுவது, தனியார் துறை கடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உயர்வு ஆகியவை விளைவுகளில் ஏற்பட்ட சிறிய மாற்றத்திற்கான காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஆண்டு நடுப்பகுதியில் வெளியிடப்பட்ட கண்ணோட்டம், நிலையான மற்றும் எங்கள் வழிகாட்டப்பட்ட வரம்புகளுக்குள் இருந்த விளைவுகளால் துல்லியமாக நிரூபிக்கப்பட்டது.

Source: CBSL, First Capital Research

ஒட்டுமொத்த விளைவு வளையி நகர்வு

First Capital

விளைவு வளையி மாத இறுதி ஒப்பீடு



வட்டி வீத மாற்றம் (bps)

Tenure	Sep-25	Jun-25	Change (bps)	Dec-24	Change (bps)
3M	7.65%	7.50%	+15	8.60%	-95
6M	7.95%	7.68%	+27	8.75%	-80
1 Yr	8.05%	7.93%	+12	8.90%	-85
2 Yrs	8.80%	8.40%	+40	9.10%	-30
3 Yrs	9.30%	8.85%	+45	9.90%	-60
4 Yrs	9.73%	9.35%	+38	10.50%	-77
5 Yrs	9.80%	9.65%	+15	10.73%	-93
6 Yrs	10.10%	9.95%	+15	10.95%	-85
7 Yrs	10.55%	10.35%	+20	11.35%	-80
8 Yrs	10.70%	10.60%	+10	11.50%	-80
9 Yrs	10.80%	10.60%	+20	11.53%	-73
10 Yrs	10.85%	10.63%	+22	11.63%	-78
12 Yrs	N/A	N/A	N/A	N/A	N/A
15 Yrs	N/A	N/A	N/A	N/A	N/A
20 Yrs	N/A	N/A	N/A	N/A	N/A

2.0

நிலையான வருமானக் கருவிகளுக்கான கண்ணோட்டம்

"பொருளாதார குறிகாட்டிகள் நிலையான மீட்சியைக் காட்டுகின்றன"

பொருளாதார குறிகாட்டிகளில் நிலைத்தன்மை பராமரிக்கப்படுகிறது

அரச பிணையங்கள் நிலையாக உள்ளன



வட்டி வீதங்கள் நிலையாக உள்ளன



USDக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பு 3.4% YTD ஆல் தேய்வடைந்துள்ளது



ஆகஸ்ட்-25இல் 11 மாதங்களுக்குப் பின் பணவீக்கம் நேர்மறையாக மாறியது



தனியார் துறை கடன் 13.8% YTDஆல் அதிகரித்துள்ளது



இருப்புகள் USD 6.2Bnஇல் நிலையாக உள்ளது



பணவீக்கம் தொடர்ந்து CBSL இலக்கை விடக் கீழே உள்ளது...

First Capital
A Janashakthi Group Company

2024ஆம் ஆண்டின் அடிப்படை விளைவின் காரணமாக தொடர்ச்சியாக 11 மாதங்களுக்குப் பிறகு ஆகஸ்ட்- 25 இல் CCPI பணவீக்கம் நேர்மறையாக மாறி, 1.2%YoY ஐப் பதிவு செய்தது. 2025 செப்டம்பரில் பணவீக்கம் தொடர்ந்து சிறிதளவு உயர்ந்து 1.5%YoY ஆக பதிவானது. உணவுப் பொருட்களின் விலை 2025 ஆகஸ்டில் 2.0% இலிருந்து செப்டம்பரில் 2.9% ஆக சிறிது உயர்ந்த அதே நேரத்தில், உணவு அல்லாத பொருட்களின் பணவீக்கம் ஆகஸ்ட்-25 இல் 0.8% இலிருந்து செப்டம்பர்-25இல் 0.7% ஆக சற்று குறைந்தது. எதிர்காலத்தைப் பொறுத்தவரை, பொருளாதாரத்தில் மந்தநிலை நிலவுவதற்கு மத்தியில் 2025E இன் எஞ்சிய காலத்திலும் 2026E இலும் பணவீக்கம் CBSL விரும்பிய வரம்பிற்குக் கீழே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



Source: Dept. Census and Statistics, First Capital Research



Source: Dept. Census and Statistics, First Capital Research

… அதே நேரத்தில் இருப்பு சேகரிப்பு தொடர்ந்து மந்தமாக உள்ளது …

இலங்கையின் மொத்த அலுவல்சார் இருப்பு மார்ச்-25இல் USD 6.5Bn ஆக பதிவாகியுள்ளது. இது செப்டம்பர்-20இல் பதிவான USD 6.6Bnக்கு பின்னர் பதிவான உயர்வாகும். இருப்பினும், மார்ச்-25 வரை இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் IMFக்கு முறையே USD 900.0Mn மற்றும் USD 209.0Mn ஆக செலுத்தப்பட்ட தீர்ப்பனவுகள் காரணமாக இதுவரை இருப்பு உருவாக்கம் மெதுவாகவே உள்ளது. மார்ச்-25 இலிருந்து, வாகன இறக்குமதிக்கான USD வெளியேற்றம் (ஆகஸ்ட் மாத இறுதி நிலவரப்படி USD 1.5Bn ஆக இருந்தது) மற்றும் மேற்கூறப்பட்ட கடன்களைத் தீர்ப்பது ஆகியவை இருப்பு அதிகரிப்பதற்கு முதன்மையான தடைகளாக இருந்தன என நாங்கள் நம்புகிறோம். 2025Eக்கான FCR கணிப்பு USD 7.0Bn ஆகவும் 2025Eக்கான IMF கணிப்பு USD 7.2Bn ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும், மீதமுள்ள வரையறுக்கப்பட்ட காலத்தையும் இருப்புகளை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் உட்பாய்ச்சலையும் கருத்தில் கொண்டு இலங்கை குறிப்பிடப்பட்ட இலக்குகளை அடையத் தவறும் என நாங்கள் நம்புகிறோம்.



… முதல் எட்டு மாதங்களாக நடைமுறைக் கணக்கு மிகை அதிகரித்த போதிலும்

இறக்குமதித் தடைகள் நீக்கப்பட்ட போதிலும் பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு இலங்கையின் வெளிநாட்டு நிலைமை தொடர்ந்து மேம்பட்டு வருகிறது. அதிகரித்த வர்த்தகப் பற்றாக்குறை, சுற்றுலா மற்றும் பண அனுப்புதல்களில் ஏற்பட்ட மேம்பட்ட வருமானங்களால் பெருமளவில் ஈடுசெய்யப்பட்ட அதே நேரத்தில் பல்தரப்பு நிறுவனங்களின் உள்வரவுகளும் இதற்கு உதவின. வாகன இறக்குமதியில் நிலவும் தேவை குறைந்து, அதிகரித்து வரும் பண அனுப்புதல்கள் மற்றும் சுற்றுலா தொடர்ந்து பயனடைவதால், இலங்கையின் நடைமுறை கணக்கு நிலைமை 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளில் மேலும் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆகஸ்ட்-25இல் நடைமுறைக் கணக்கு மிகை USD 368.0Mn ஆக உயர்ந்துள்ளது



இருப்பினும், USD இருப்புகளை சேகரிக்க CBSL தொடர்ந்து சந்தையில் இருந்து USDகளை வாங்குகிறது...

First Capital

உள்நாட்டு சந்தையில் இருந்து நிகர USD வாங்குபவராக இலங்கை மத்திய வங்கி, தொடர்ந்து 14ஆவது மாதமாக சந்தையில் விற்கப்பட்ட தொகையை விட அதிக தொகைக்கு அமெரிக்க டொலர்களை வாங்கியது. இதுவரை செப்டம்பர்-25 வரை CBSL உள்நாட்டு சந்தையில் இருந்து நிகரமாக USD 1.4Bnஐ வாங்கியுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுக் கணக்கில் நடைமுறைக் கணக்கு மிகைகள் தொடர்ந்து பதிவாகி வருவதால் USD கொள்முதல்கள் தொடரும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.



...திரவத்தன்மை முந்தைய உச்சங்களுக்குத் திரும்ப உதவுகிறது...

எங்கள் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, 2025 ஆகஸ்டில் மிகவும் குறைந்த நிலையில் இருந்த வங்கித் திரவத்தன்மை மீண்டும் முன் இருந்த உச்ச நிலைக்கு அருகில் திரும்பியுள்ளது. CBSL இன் தொடர்ச்சியான USD கொள்முதல்கள், அரசு பத்திரங்களின் unwinding தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை மற்றும் அரசு நிறுவனங்களால் அதிகரித்த வரி வசூல் ஆகியவை திரவத்தன்மை நிலையை மீட்டெடுக்க உதவிய அதே நேரத்தில் வாகன இறக்குமதிகளால் ஏற்பட்ட கடன் தேவையின் அதிகரிப்பு மீட்சியை மந்தமாக்கியது..



கடன் தேவை அதிகரித்த போதிலும்......

அதிகரித்த தனியார் கடன் வளர்ச்சியால் மொத்த கடன் வளர்ந்த அதே நேரத்தில் நாட்டிற்கான கடன் பின்னடைந்தது



2025Eஇல் GDPஇற்கு கடன் 50% உடன் தனியார் துறை கடன் வளர்ச்சி 15%ஐ நெருங்கி இந்தப் போக்கு நீடிக்கும் என FCR எதிர்பார்க்கிறது



Source: CBSL, First Capital Research

... அரசாங்கம் தொடர்ந்து கட்டுப்பாட்டுடன் கவனமாக உள்ளது...

IMF நிபந்தனைகளுக்கு இணையாக 2023ஆம் ஆண்டு வரை ஆரம்ப மிகைகளை பராமரிப்பதில் அரசாங்கம் பெரும்பாலும் நிலையாக இருந்து வருகிறது. ஆரம்ப மிகை 2024இன் 2.2% இலிருந்து 2025E இல் 2.3% (GDPஇல்) அடைவதோடு இந்தப் போக்கு 2025E மற்றும் 2026E இல் நிலைநிறுத்தப்படும் என FCR எதிர்பார்க்கின்றது.

ஆரம்ப மிகை தொடர்ந்து இரண்டு காலாண்டுகளாக நேர்மறையாக இயங்குகிறது



ஆரம்ப இருப்பு (GDPஇல் %ஆக) தொடர்ந்து நேர்மறையாக இருப்பதால் திறைசேரி மீதான சுமை குறைகிறது



… அதிகரித்த வருமானம் மற்றும் வரையறுக்கப்பட்ட செலவினங்களால் ஆதரிக்கப்படுகிறது…

மார்ச்-23இல் IMF உடன் EFF திட்டத்தில் நுழைந்ததிலிருந்து, 2023இலிருந்து இன்று வரை இலங்கை கடுமையான நிதி ஒழுக்கத்தைப் பேணி வருகிறது. வரி சீர்திருத்தங்களின் பின்னணியில் வருமானம் தொடர்ந்து விரிவடைந்துள்ள அதே நேரத்தில் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது பெரும்பாலும் மூலதனச் செலவினங்களைக் குறைப்பதன் மூலம் உருவாகியுள்ளது. பெரும்பாலும் IMF நிபந்தனைகளுக்கு இணையாக, 2025E இல் வருமானம் மற்றும் செலவினம் GDPஇல் 15.5% மற்றும் 21.4% ஐ எட்டும் என FCR எதிர்பார்க்கிறது.





Source: CBSL, MoF, First Capital Research

அரசாங்கம் நேர்மறையான திறைசேரி மிகையை பராமரிக்க உதவுதல்...

2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து தற்போது வரை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து பராமரித்து வரும் ஆரம்ப மிகைகள், திறைசேரியின் பண மிகைக்கு ஒரு முக்கிய காரணியாக உள்ளது.



Note: Figures from Apr-25 are forecasts of FCR.

திறைசேரியின் பண மிகை

ஆதிக்கம் செலுத்தும் காரணிகள்

- அரசாங்கத்தின் ஆரம்ப மிகை...
- பல்தரப்பு உட்பாய்ச்சல்கள்...

... முதிர்வு காலம் நெருங்கி வரும் போதிலும் CBSLக்கு ஏலங்களை ஏற்க வேண்டிய அழுத்தத்தைக் குறைத்தல்.

திறைசேரியின் பண மிகை, T-Bill மற்றும் முறிகளின் ஏலங்களில் சில ஏலங்களை நிராகரிக்க உதவியுள்ளது. இதன் விளைவாக வட்டி வீதங்கள் மீது அதிக முன்னெச்சரிக்கை கட்டுப்பாட்டை பேணுகிறது.



பெரும்பாலும் T-Bill மற்றும் முறி ஏலங்களின் போது ஏலங்கள் நிராகரிக்கப்படுவது புதிய வெளியீடுகளை விட முதிர்வுகள் அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களின் காரணமாகும். திறைசேரியின் பண மிகை தான் மத்திய வங்கிக்கு இதைச் செய்ய உதவியது.

Source: CBSL, First Capital Research

3.0

நிலையான வருமான ஆரோக்கிய மதிப்பெண்

“ஆரோக்கிய மதிப்பெண் குறைந்து வருவதற்கான அறிகுறிகளைக் காட்டுகிறது”

FI பொருளாதார ஆரோக்கிய மதிப்பெண்: ஜூலை-25 - செப்டம்பர்-2025

ஜூன்-25 இல் எங்கள் கடைசி புதுப்பிப்பிலிருந்து, ஆரோக்கிய மதிப்பெண் பெரும்பாலும் நிலையற்றதாக இருந்து 69-72 புள்ளிகளுக்கு இடையில் உள்ளது. ஆரோக்கிய மதிப்பெண்ணை சுற்றியுள்ள ஏற்ற இறக்கம் முதன்மையாக, பணவீக்கம் நேர்மறைப் பகுதிக்கு திரும்புவதாலும் வங்கித் துறையின் கிடைக்கக்கூடிய திரவத்தன்மை நிலையின் ஏற்ற இறக்கத்தாலும் ஏற்படுகிறது.

முதன்மை அளவுகோல்கள் - 54 - 02 = 52

இரண்டாம் நிலை அளவுகோல்கள் - 19 + 00 = 19

பொருளாதார ஆரோக்கிய மதிப்பெண் [மார்ச் 2025] = 71

[ஜூன்-25இல் 72 ஆகவும், செப்டம்பர்-24இல் 68 ஆகவும் இருந்தது (1 வருடத்திற்கு முன்)]

ஆரோக்கிய மதிப்பெண் மாற்றங்கள்
முதன்மை அளவுகோல்கள் – ஜூன்-25 - செப்டெம்பர்-25

52/75

First Capital

வெளிநாட்டு இருப்புகள்

முன்னைய மதிப்பெண் 11/15

11/15

ஆகஸ்ட்-25 இல் USD 6.1Bnஇலிருந்த அந்நியச் செலாவணி இருப்பு செப்டம்பர்-25 இல் சிறிதளவு அதிகரித்து USD 6.2Bn ஆக உயர்ந்தது. இருப்பினும், மார்ச்-25இல் பதிவான USD 6.5Bn உச்சத்தை விட இருப்பு தொடர்ந்து குறைவாகவே உள்ளது.

திரவத்தன்மை

12/15

12/15

ஜூலை-25 இல் ரூ. 50.0Bnக்கு அருகில் சரிந்ததிலிருந்து வங்கி அமைப்பில் திரவத்தன்மை எங்கள் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப மீண்டும் உயர்ந்து தற்போது ஒக்டோபர்-25 இல் ரூ.169.1Bnஐச் சுற்றி உள்ளது.

பணவீக்கம்

15/15

13/15

-2

11 மாத பணச்சுருக்கத்திற்கு பின், ஆகஸ்ட்-25 இல் பணவீக்கம் நேர்மறை 1.2% ஆக உயர்ந்து, தொடர்ந்து செப்டம்பர்-25 இல் உணவு மற்றும் உணவு அல்லாதவற்றின் விலைகள் அதிகரித்ததால் 1.5% ஆக மேலும் அதிகரித்தது.

வெளிநாட்டு செயற்பாடுகள்

முன்னைய மதிப்பெண் 01/10

01/10

அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்து மெதுவாக மேம்பட்டு ரூ. 130.3Bn ஆக பதிவாகியுள்ளன. இருப்பினும், இது CBSL வரம்பான 5% ஐ விடக் குறைவாகவே உள்ளது.

கடன்

05/10

05/10

ஆகஸ்ட்-25இல் தனியார் துறைக்கான கடன் தொடர்ந்து விரிவடைந்து ஆகஸ்ட்-25இல் ரூ. 226.8Bn ஐயும் YTD வளர்ச்சியாக 13.8% ஐயும் பதிவு செய்தது.

CBSL Holdings

10/10

10/10

ஜூன் 25 முதல் CBSL holdings மாறாமல் ரூ. 2.5Tn ஆக உள்ளன.

ஆரோக்கிய மதிப்பெண் மாற்றங்கள்
இரண்டாம் நிலை அளவுகோல்கள் – ஜூன்-25 - செப்டெம்பர்-25

19/25

First Capital
A Janashakthi Group Company

முன்னைய மதிப்பெண்

மதிப்பீட்டுக் கண்ணோட்டம்

பொருளாதார குறிகாட்டிகளில் மீட்சி மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றின் ஆதரவுடன், S&P இலங்கைக்கான தங்கள் மதிப்பீட்டை CCC+ ஆக திருத்தியது. இதன் பிரகாரம் மூன்று நிறுவனங்களும் இலங்கைக்கான தங்கள் மதிப்பீட்டை அதன் முன்னைய SD மதிப்பீட்டிலிருந்து திருத்தியுள்ளன.

02/05 ↔ 02/05

வெளிநாட்டுச் சூழல்

நடைமுறைக் கணக்கு மிகை நேர்மறையாக இருந்தபோதிலும், ஒக்டோபர்-25 இல் USDக்கு எதிராக ரூபாய் +3.4% YTD தேய்ந்து LKR 304.0/USD இல் முடிந்தது.

03/05 ↔ 03/05

BOT மற்றும் BOP

இறக்குமதி தடைகள் தளர்த்தப்பட்டதன் மூலம், முதல் 8 மாதங்களுக்கான வர்த்தக பற்றாக்குறை 19.6%YoY ஆல் அதிகரித்து USD 4.3Bn ஆக உயர்ந்துள்ளது. இருப்பினும், சுற்றுலா மற்றும் பணம் அனுப்புதலின் உதவியுடன் நடைமுறைக் கணக்கு தொடர்ந்து வலுவடைந்து ஜனவரி-ஆகஸ்ட் 2025 இல் USD 2.0Bn ஆக பதிவாகியுள்ளது.

04/05 ↔ 04/05

முன்னைய மதிப்பெண்

அரசியல்சார் இடர்

மே-25 இல் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தலில் ஆளும் கட்சி பெரும்பான்மையைப் பெற்றதன் மூலம் 2025 ஆம் ஆண்டில் அரசியல் ஸ்திரத்தன்மை மேலும் மேம்பட்டது.

05/05 ↔ 05/05

முதலீட்டாளர் நம்பிக்கை

ஜூன்-25-ல் வணிக நம்பிக்கை குறியீடு 210 என்ற வரலாறு காணாத உச்சத்தை எட்டியது. இருப்பினும், அதன் பின்னர் சர்வதேச சூழலில் சமீபத்தில் ஏற்பட்ட மாற்றங்களுடன் ஆகஸ்ட்-25 இல் BCI குறியீடு சற்று சரிந்து 192 புள்ளிகளாக இருந்தது..

05/05 ↔ 05/05

2026E நடுப்பகுதியில் FI ஆரோக்கியம் சற்று குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

- டிசம்பர்-24இல் 78 புள்ளிகள் என்ற உச்சத்தை எட்டியதிலிருந்து ஆரோக்கிய மதிப்பெண்ணுக்கு வழிவகுக்கும் பொருளாதார குறிகாட்டிகள் மெதுவாக வீழ்ச்சியடைந்துள்ளன. கடன் தேவை அதிகரித்து வருதல், இருப்புகளில் சரிவு மற்றும் வர்த்தக பற்றாக்குறை விரிவடைதல் ஆகியவை இதற்கு பெரும்பாலும் பங்களித்தன.
- தனியார் துறையின் கடன் தேவை அதிகரிப்பதாலும், அமைப்பில் திரவத்தன்மை குறைவதாலும், FI ஆரோக்கிய மதிப்பெண் மேலும் குறையும் என எதிர்பார்க்கிறோம். இது *ஆரோக்கிய மதிப்பெண்ணில் சிறிது சரிவை ஏற்படுத்தும் அதே வேளை வட்டி வீதங்களில் சிறிது அழுத்தத்தையும் சேர்க்கும்* என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- எவ்வறாயினும் FI ஆரோக்கிய மதிப்பெண் வட்டி வீத அழுத்தத்தில் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்தும் வகையில் குறைந்த ஆபத்துள்ள பகுதியில் தொடர்ந்து இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

First Capital நிலையான வருமான ஆரோக்கிய மதிப்பெண்



Source: First Capital Research

4.0
பரிந்துரை பராமரிக்கப்படுகிறது

“வட்டி வருவாயை தொடர்ந்து பெறும் நிலைப்பாட்டை பராமரிக்கவும்”

OPR நிலையாக இருக்கும், பொருளாதாரத்தை விரைவுபடுத்த 25bps குறைக்கப்படலாம்.



2025 செப்டம்பர் 23 ஆம் திகதி நடைபெற்ற 5ஆவது நாணயக் கொள்கை மதிப்பாய்வில் ***First Capital* ஆய்வு எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப**, *இலங்கை மத்திய வங்கி* **ஓரிரவு கொள்கை வீதத்தை (OPR) 7.75% இல் பராமரிக்க முடிவு செய்தது**.

இலங்கை அரசின் மட்டுப்படுத்தப்பட்ட மூலதனச் செலவினங்களுடன் நுகர்வோர் செலவினங்களைக் கட்டுப்படுத்தும் அதிக வரிகளைக் கருத்தில் கொண்டு, பொருளாதார வளர்ச்சி 2H2025இல் குறையக்கூடும் என நாங்கள் நம்புகிறோம். மேலும் ஜூலை-25 இல் தற்போது 9.01x ஆக இருக்கும் M2b **பணப்** *பெருக்கியின் மெதுவான விரிவாக்கத்திலிருந்தும் வளர்ச்சியின் தளர்வு தெரிகிறது. மேலும் இந்த மந்தநிலை 2026ஆம் ஆண்டிற்கும் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா பல நாடுகளுக்கு குறிப்பிடத்தக்க வரிகளை விதித்துள்ளதால் செலவுகள் குறைந்து வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது.*

எனவே, மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, ***நவம்பர்-25 கொள்கை மதிப்பாய்வில் CBSL OPR ஐ 25bps மேலும் தளர்த்தும் என நாங்கள் நம்புகிறோம்.*** *இருப்பினும், உயரும் வீதங்கள் மீது குறைந்த அழுத்தத்துடன் அடுத்த 12 மாத காலத்திற்கு குறைக்கப்பட்ட வீதங்கள் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

Source: CBSL, First Capital Research

பரிந்துரை பராமரிக்கப்படுகிறது

வட்டி வருவாயை தொடர்ந்து பெறும் நிலையைத் தொடரவும்

பரிந்துரை :

- “அடுத்த 6-12 மாதங்களுக்கு விளைவு நிலையானதாக இருக்கும்”

- **தற்போது வருவாய்கள் எங்கள் கணிப்பு வரம்பிற்குள் இருப்பதுடன் எங்கள் எதிர்பார்ப்புகளுடன் ஒத்துப்போகின்றன:** *தற்போது விளைவு வளையி நமது வரம்புகளுக்குள் உள்ளது. உள்ளூர் வங்கிகள் குறிப்பிட்ட திரவத்தன்மை நிலைகளை வலுப்படுத்துவதற்காக அரச பத்திரங்களை விற்றதன் விளைவாக சிறிது மேல்நோக்கிய நகர்வைக் காட்டுகிறது. இந்த முன்னேற்றங்களுக்கு மத்தியில் விளைவு வளையி தற்போது 1Yr வர்த்தகம் 8.05% ஆகவும், 5Yr மற்றும் 10Yr வர்த்தகம் முறையே 9.80% மற்றும் 10.80% ஆகவும் எங்கள் வரம்புகளுக்குள் உள்ளது.*

- **நவம்பர்-25 மதிப்பாய்வில் மேலும் 25bps வீதக் குறைப்பு சாத்தியம்:** *GDP வளர்ச்சி 4.9%YoY நேர்மறையாக இருந்தபோதிலும், அடுத்த 12 மாத காலகட்டத்திற்கு எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சி மெதுவாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதியில் சுங்க வரிகள் காரணமாக ஏற்படும் மந்தநிலை காரணமான உலகளாவிய வளர்ச்சி குறைவுடன் சராசரிக்கும் குறைவான அரசாங்கத்தின் மூலதனச் செலவினங்கள் மற்றும் அதிக வரிகளால் சுமையாக இருக்கும் நுகர்வோர் வளர்ச்சி ஆகியவை இதை பாதிக்கும். எனவே, நவம்பர்-25 கொள்கை மதிப்பாய்வில் OPR ஐ தற்போதுள்ள 7.75% இலிருந்து 7.50% ஆகக் குறைக்கும் மற்றொரு 25bps வீதக் குறைப்புக்கு இடம் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.*

- **வட்டி வீதங்கள் மீதான அழுத்தத்தைக் குறைப்பதன் மூலம் திரவத்தன்மை தொடர்ந்து உயர்ந்து இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வாகன இறக்குமதியிலிருந்து தேங்கி நிற்கும் தேவை குறையும் என எதிர்பார்க்கப்படுவதாலும்** *அதன் பின்னர் கடன் வழங்கலில் சிறிது மந்தநிலை நிலவுவதாலும் வங்கி அமைப்பில் திரவத்தன்மை அடுத்த 12 மாதங்களில் ரூ. 150-200Bn வரை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அதிகரித்த வரி வசூல் மற்றும் குறைந்த செலவினம் ஆரம்ப மிகைக்கு வழிவகுக்கும் எனவும் மேலும் குறுகிய காலத்தில் திரவத்தன்மை மீதான அழுத்தத்தை விடுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

- **குறுகிய கால நிலைகளை பேணவும்: பரிந்துரை பராமரிக்கப்படுகிறது**: *அடுத்த 12 மாதங்களில் விளைவு வளையி நிலைத்திருக்கும் எனவும் எங்கள் கணிப்பு வரம்புகளுக்குள் இருக்கும் என்ற எதிர்பார்க்கப்படுவதால் முதலீட்டாளர்கள் குறுகிய காலத்திற்குள் தொடர்ந்து முதலீடு செய்யவும் வட்டி வருவாயைத் தொடர்ந்து பெறும் நிலைப்பாட்டை (carry position) பேணவும் பரிந்துரைக்கிறோம். இதனால் மூலதன இழப்பை குறைத்து, முதிர்வுக் காலம் வரை வைத்திருப்பதன் மூலம் வட்டி வருமானத்தை ஈட்ட முடியும்.*

டிசம்பர்-25 மற்றும் ஜூன்-26க்கான பத்திர வருவாய் எதிர்பார்ப்புகள்:

அழுத்தம் மெதுவாக அதிகரிக்கும் போதும் விளைவு நிலையாக இருக்கும்

First Capital
A Janashakthi Group Company

நவம்பர்-25 கொள்கைக் கூட்டத்தில் 25bps வீதக் குறைப்புக்கான FCR கணிப்பு GDPஇல் ஏற்படக்கூடிய மந்தநிலையை அதிகரிப்பதற்காக இருந்தபோதிலும் டிசம்பர்-25 மற்றும் ஜூன்-26 காலகட்டத்தில் விளைவு வளையி நிலையானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. GDPஇன் மெதுவான மீட்சிக்கு மத்தியில் கடன் தேவை தொடர்ந்து அதிகரிப்பதால் சந்தையில் திரவத்தன்மை குறையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலும், முக்கிய பொருளாதார குறிகாட்டிகளில் எதிர்பார்த்த அளவில் விரைவாக மீளாதது மற்றும் 2026E, 2027E இல் அதிகரித்த கடன் முதிர்வுகள் ஆகியவை விளைவு வளைவில் மேலும் சரிவைக் கட்டுப்படுத்தும் என கணிக்கப்படுகிறது. இதனால் டிசம்பர்-25 மற்றும் ஜூன்-26 காலகட்டத்தில் விளைவு வளையி நிலையாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



அடுத்த 12 மாதங்களுக்கு வீதங்கள் நிலையாக இருக்கும்



Source: First Capital Research

பொறுப்புத் துறப்பு

This Review is prepared and issued by First Capital Holdings PLC based on information in the public domain, internally developed and other sources, believed to be correct. Although all reasonable care has been taken to ensure the contents of the review are accurate, First Capital Holdings PLC and/or its Directors, employees, are not responsible for the accuracy, usefulness, reliability of same. First Capital Holdings PLC may act as a Broker in the investments which are the subject of this document or related investments and may have acted on or used the information contained in this document, or the research or analysis on which it is based, before its publication. First Capital Holdings PLC and/or its principal, their respective Directors, or Employees may also have a position or be otherwise interested in the investments referred to in this document. This is not an offer to sell or buy the investments referred to in this document. This Review may contain data which are inaccurate and unreliable. You hereby waive irrevocably any rights or remedies in law or equity you have or may have against First Capital Holdings PLC with respect to the Review and agree to indemnify and hold First Capital Holdings PLC and/or its principal, their respective directors and employees harmless to the fullest extent allowed by law regarding all matters related to your use of this Review. No part of this document may be reproduced, distributed or published in whole or in part by any means to any other person for any purpose without prior permission.

நன்றி!

"SUCCESSFUL INVESTMENTS IS ABOUT MANAGING RISKS"

Contact Us

First Capital Holdings PLC
No: 02, Deal Place,
Colombo 00300,
Sri Lanka.
E: research@firstcapital.lk

Dimantha Mathew
Chief Research & Strategy Officer
T: +94 11 2639 853
E: dimantha@firstcapital.lk

Ranjan Ranatunga
Assistant Vice President – Research
T: +94 11 2639 863
E: ranjan@firstcapital.lk

Shahana Kanagaratnam
Senior Assistant Manager – Research
T: +94 11 2639 866
E: shahana@firstcapital.lk

Akna Tennakoon
Senior Research Analyst
T: +94 11 2639 866
E: akna@firstcapital.lk

Dilhari Dias
Research Analyst
T: +94 11 2639 866
E: dilhari@firstcapital.lk

Manusha Kandanaarachchi
Research Associate
T: +94 11 2639 866
E: manusha@firstcapital.lk

Salaama Sanoon
Research Associate
T: +94 11 2639 866
E: salaama@firstcapital.lk